1972 ஆகஸ்ட் 21]

தஞ்சாவூர் அரண்மனை

*** 210. வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை அரண்மனையில் உள்ள கூடகோபுரம் பழுதடைந்து தற்போது இடியும் நிலையில் உள்ளது என்பது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். பழுது பார்க்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே. இந்தக் கூடகோபுரத்தை பழுது பார்க்கும் பணியை மத்திய சர்க்கார் மேற்கொள்ள வேண்டியிருக்கிறதா ? அல்லது மாநில அரசாங்கத்திற்கு பணியை மேற்கொள்ள உரிமை வழங்கப் பட்டிருக்கிறதா ? மாநில அரசாங்கத்திற்கு உரிமை வழங்கப்பட்டிருந்தால் மத்திய அரசாங்கம் அதற்குச் செலவிடும் தொகை எவ்வளவு? அந்த வேலை எப்போது செய்து முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தஞ்சை அரண்மனையைப் பொறுத்தவரையில், அது தமிழக அரசின் மேற்பார்வையில் தான் இருக்கிறது. இப்போது பொதுப்பணித் துறை அதை மேற்பார்வை செய்து வருகிறது. சில பகுதிகள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. மேலும் சில பகுதிகள் பழுதுபட்டிருக்கின்றன. எல்லாவற்றையும் பழுதுபார்க்க அதிக மாகச் செலவு ஆகும். ஆகவே, அரண்மனையின் அந்தப் பகுதியை தொல் பொருள் ஆராய்ச்சித் துறைக்கு மாற்றிட பொதுப்பணித் துறை விருப்பம் தெரிவித்திருக்கிறது. தொல்பொருள் ஆராய்ச்சித் துறை பழுதுபார்க்கும் பணியை மேற்கொள்ள இருக்கிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Wages for labourers

*** 211 Q.—Thiru N. K. PALANISAMY :** Will the Hon. the Minister for Labour be pleased to state whether there is any proposal to amend the Minimum Wages Rules to enable the plantation workers to get double the normal wages for overtime work?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஆம்.

திரு. என். கே. பழனிசாமி : சார், இப்போது 'ஓவர் டைம் வேஜஸ' ஒரு கிலோவுக்கு 4½ அணு வீதம் கொடுக்கிறார்கள். ஆனால் அண்டையில் இருக்கிற கேரளத்தில் ஒரு கிலோவுக்கு 9 அணு வீதம் கொடுக்கிறார்கள். அதைப்போல் இங்கும் கொடுக்க, தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, அதுபற்றி ஏற்கெனவே கேரளா, மைசூர், ஆந்திரா ஆகிய அரசாங்கங்களின் தொழிலாளர் நல ஆணையாளர்களுடன் நமது மாநில தொழிலாளர் நல ஆணையாளர் கடிதப் போக்குவரத்து நடத்தியிருக்கிறார். இன்னும் திட்டவட்டமான பதில் வரவில்லை. எனினும் பொதுமக்களுடைய கருத்தை அறிவதற்காக 'முதனிலை' அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிய ஊதியத்தையும், வசதிகளையும் பெற்றுத்தர முத்தரப்பு மாநாட்டில் மேற்கொள்ளபட்ட முடிவுகள் எல்லாம் செயல்படுத்தப்பட்டு விட்டனவா? இல்லையானால் மேற்கொண்டு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல, பிற மாநிலங்களின் கருத்தை அறிய நமது மாநில தொழிலாளர் நல ஆணையாளர் முயற்சி மேற்கொண்டிருக்கிறார். இத்துடன் பொது மக்கள் கருத்தை அறிவதற்காக 'முதனிலை' அறிக்கை ஒன்றும் வெளியிடப் பட்டிருக்கிறது.

*212. வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர்களுக்கு உற்பத்திக்கேற்ற ஊதியம் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, உற்பத்தியை மிக அதிகமாகப் பெருக்க ஆவன செய்ய வேண்டுமென்று முயற்சி எடுத்து வருகின்ற இந்தக் காலத்தில் அத்தகைய தொழிலாளர்களுக்கு அவர்கள் உற்பத்தி எவ்வளவு அதிகமாகச் செய்கிறார்களோ அந்த அளவுக்கு அவர்களுக்கு போனஸ் அளித்து ஊக்கப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, இம் மாநிலத்தில் உற்பத்திக்கேற்ற ஊதியம் வழங்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் ஊக்கத் தொகை அளிக்கும் திட்டங்களும், உற்பத்தி உயர்வையொட்டி ஊதியத்தையும் உயர்த்திக் கொடுப்பதற்கு வகை செய்யும் சீரமைப்புத் திட்டங்களும் தனித்தனி நிறுவனங்களைப் பொறுத்து, தொழி